[1993 ஏப்ரல் 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 251 திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

251—

ஆத்தூர் தொகுதியிலுள்ள ஊர்களில் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தல்.

10180 — திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி தளவாய்பட்டி, வானாபுரம் ஆகிய இரண்டு ஊர்களில் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: உணவு மற்றும் கூட்டுறவு துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் புங்கவாடி புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நடத்தும் பைத்தூர் நியாய விலைக் கடையினை இரண்டாகப் பிரித்து சுமார் 160 குடும்ப அட்டைகள் கொண்ட ஒரு நியாயவிலைக் கடையை பகுதி நேர கடையாக 23.12.92லேயே திறக்கப்பட்டு விட்டது. தவளப்பட்டிக்கும் வானாபுரத்திற்கும் இடைப்பட்ட தூரம் ஒரே கிலோ மீட்டர் என்பதால் வானாபுரத்தில் தனியாக நியாயவிலைக் கடை திறக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று ராணிப்பேட்டை விழாவில் தமிழக மக்களின் தங்கக் கட்டியான நமது இதய தெய்வத்திற்கு நய வஞ்சகர்களைக் கண்டு சீறிப் பாயும் சிங்கக் குட்டியை பரிசாகக் கொடுத்த, புலிக் குட்டியான நமது உணவு அமைச்சர் அவர்கள் மலை வாழ் மக்களின் நலன் கருதி வானாபுரத்தில் பகுதிநேர கடையையாவது ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பாரா எனப்பணிவுடன் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு, ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அவர்கள் இரண்டு இடங்களைக் கேட்டு ஒன்று கொடுக்கப்பட்டுவிட்டது. இன்னொன்று அவர் கேட்பது இன்னும் ஒரே கிலோமீட்டர் தொலைவில்தான் இருக்கிறது. இடையிலே இயற்கைத் தடைகள் இருக்கிறதா என்பதை அவர்கள் சொல்வார்களானால் அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.